بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 22/10/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது ஷஹாதத்தின் குறிப்பில் ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டிருந்தது. அதுகுறித்து மேலும் ஆராய்ந்ததில் தெரிய வந்ததாவது, அவர்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கிலாஃபத் பொறுப்பில் அமரவில்லை. ஆரம்பத்திலோ ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களது நோக்கம், மதீனாவில் இருக்கும் அனைத்துக் கைதிகளையும் அடிமைகளையும் கொன்றுவிட வேண்டும் என்றிருந்தது. ஆனால் முஹாஜிர் சஹாபிகள் புரிய வைத்ததில் அவர்கள் தமது இந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டதும் உபைதுல்லாஹ் பின் உமர் அவர்கள் அன்னாருக்கு முன் நிறுத்தப்பட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உபைதுல்லாஹ் அவர்களைக் கொன்றுவிடுமாறு ஆலோசனை வழங்கினார்கள். ஆயினும் மற்ற சஹாபிகள் அந்த ஆலோசனைக்கு எதிராக கருத்து தெரிவித்தார்கள். நேற்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கொல்லப்பட்டார்கள். இன்று அவர்களுடைய மகன் கொல்லப்படுவது பொறுத்துக்கொள்ள முடியாத கண்டிப்பும் கடினமும் ஆகும் என்று கூறினார்கள். இந்நிலையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது செல்வத்திலிருந்து கொல்லப்பட்டவர்களின் குடும்பத்திற்கு ஈட்டுத்தொகை வழங்கினார்கள்.

தபரியின் வரலாற்று நூலின் அடிப்படையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் (கொலைக்கு) பழிதீர்க்கும் விதமாக உபைதுல்லாஹ் அவர்களை ஹர்மஸானுடைய மகனிடம் ஒப்படைத்து விட்டார்கள். அவர் உபைதுல்லாஹ்வைக் கொல்வதற்காக செல்கையில் மக்கள் அவரிடம் உபைதுல்லாஹ்வை விட்டுவிடுமாறு மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டார்கள். அதன் காரணத்தினால் ஹர்மஸானின் மகன் இறைவனுக்காகவும் அந்த மக்களுக்காகவும் உபைதுல்லாஹ்வை விட்டுவிட்டார். கொல்லப்பட்ட - உடன்படிக்கை செய்துகொண்ட காஃபிருக்கு ஈடாகக் கொலை செய்த முஸ்லிமுக்கு தண்டனை வழங்க இயலுமா? என்ற இந்த விவகாரத்துக்குத் தீர்வு கூறுவதற்காக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தின் விளக்கத்தைக் கூறினார்கள். **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** முஸ்லிம் அல்லாதவர்களைக் கொன்ற முஸ்லிம் கொலையாளிக்கு

ஸஹாபிகள் மரண தண்டனை விதித்தார்கள் என்பதே அவர்களின் நடைமுறையாக இருந்து வந்தது என்பது இந்த அறிவிப்பில் இருந்து நிரூபணம் ஆகிறது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பணிவு மற்றும் எளிமையின் நிலை எவ்வாறு இருந்தது எனில், அன்னார் மரணத்தருவாயில் தமது மகனிடம் "என்னுடைய கஃபனில் நடுநிலையை மேற்கொள்ளுங்கள். ஒருவேளை அல்லாஹ்விடம் எனக்காக நன்மை இருக்குமெனில் எனக்கு அதைவிட நல்ல ஆடையை மாற்றி விடுவான். ஒருவேளை அதற்கு தகுதி அற்றவனாக இருந்தால் என்னிடம் இருந்து பறித்துக் கொள்வான். மேலும் பறித்துக் கொள்வதில் விரைவு காட்டுவான். என்னுடைய கபர் விஷயத்திலும் நடுநிலையை மேற்கொள்ளுங்கள். ஒருவேளை அல்லாஹ்விடம் எனக்கு அதில் நன்மை இருக்கின்றது எனில் அவன் எதுவரை எனது பார்வை செல்லுமோ அதுவரை அதனை விசாலமாக்குவான். மேலும் ஒருவேளை அதற்கு தகுதி அற்றவனாக நான் இருந்தால் அதனை எனக்கு எனது குறுக்கெலும்பு ஒடியும் அளவுக்கு சுருக்கி விடுவான். மேலும், என்னுடைய ஜனஸாவுடன் எந்தப் பெண்ணையும் அழைத்து செல்லாதீர்கள். என்னிடம் இல்லாததைக் கூறி என்னைப் புகழ்ந்துரைக்காதீர்கள். ஏனென்றால் அல்லாஹ் என்னை நன்கு அறிவான். மேலும் நீங்கள் என்னை கொண்டு செல்லும்போது விரைவாக கொண்டு செல்லுங்கள். ஒருவேளை அல்லாஹ்விடத்தில் எனக்காக நன்மை இருக்கின்றது என்றால், மிகச் சிறந்த விஷயத்தின் பால் நீங்கள் என்னை அனுப்புகிறீர்கள். மேலும் ஒருவேளை அவ்வாறாக இல்லை எனில் நீங்கள் உங்களுடைய கழுத்திலிருந்து நீங்கள் சுமந்து கொண்டிருக்கின்ற தீமையை இறக்கி வைத்துவிடுவீர்கள்" என்று கூறினார்கள்.

இது தவிர, இந்தக் குறிப்பும் கிடைக்கின்றது. அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னை மிஸ்க் அதாவது கஸ்தூரி போன்றவற்றைக் கொண்டு குளிப்பாட்டாதீர்கள் என்று அறிவுறுத்தி இருந்தார்கள். **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இதுபற்றி கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எப்படிப்பட்ட மனிதர் என்றால், அவர்கள் தமது வாழ்நாள் முழுவதையும் இஸ்லாமிய சமுதாயத்தின் மீதான கவலை மற்றும் சிந்தனையில் கழித்து விட்டார்கள். அன்னார் எல்லா சந்தர்ப்பத்திலும் மேன்மையிலும் மேன்மையான தியாகங்களைச் செய்தார்கள். செயல் அடிப்படையில் அந்தத் தியாகங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய தியாகங்கள் வரை சென்றடையவில்லை என்றாலும், நோக்கம் மற்றும் எண்ணத்தின் அடிப்படையில் அனைவருடையதும் சமமாகவே இருந்தன.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணித்தபோது உமர் (ரலி) அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்துவிட்டது. அன்னார் கூறினார்கள்: இறைவன் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது அருள் புரிவானாக! நான் பலமுறை அவர்களை முந்திச் செல்ல முயற்சி செய்திருக்கிறேன். ஆயினும் ஒருபோதும் வெற்றி பெறவில்லை. ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செல்வத்தைக் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். எனவே நான் எனது செல்வத்தில் பாதியை கொண்டு சென்றேன். நான் இன்று அபூபக்ர் (ரலி) அவர்களை முந்திவிடுவேன் என்று கருதினேன். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எனக்கு முன்பாக அங்கு வந்து விட்டிருந்தார்கள்.

மேலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் அன்னாருக்கு உறவும் இருந்தது. மேலும் அவர்கள் எதனையும் விட்டு வைத்திருக்கமாட்டார்கள் என்று அறிந்தும் இருந்தார்கள். எனவே அன்னார், அபூபக்ரே! வீட்டில் என்ன விட்டு வைத்துள்ளீர்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், வீட்டில் இறைவனையும் ரஸூலின் பெயரையும் விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள். இதைக் கூறியவாறு ஹஸ்ரத்

உமர் அவர்கள் அழுதவாறே தற்போதும் என்னால் அவர்களை முந்த முடியவில்லை என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இவை அவர்களுடைய தியாகங்களாக இருந்தன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முன்னரும் கொடுத்து வந்திருந்தார்கள். ஆனால் குறிப்பான சந்தர்ப்பம் வந்தபோது அனைத்தையும் கொண்டு வந்து வைத்து விட்டார்கள். ஒருபுறம் இந்த மக்கள் இருந்தார்கள். மறுபுறம் எப்படிப்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்குத் தங்களது செல்வத்தின் பத்தில் ஒரு பங்கைக் கூட தியாகம் செய்வதற்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. மேலும் அவர்கள், நாங்கள் பறிகொடுத்து விட்டோம் என்று கூறுகிறார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மரணிக்கும் தருவாயில் அவர்களது கண்கள் மீண்டும் மீண்டும் ஈரமாகி கொண்டிருந்தன. மேலும், இறைவா! நான் எந்த ஒரு பரிசுக்கும் தகுதி அற்றவனாவேன். நானோ தண்டனையிலிருந்து தவிர்ந்து கொள்ளவே நாடுகிறேன் என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் ஸுஹைப் (ரலி) அவர்கள் தொழ வைத்தார்கள். மேலும் அன்னாரை கபரில் இறக்கியவர்களுள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஸயீது பின் ஸைது (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி), அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஸஅது பின் அபீவக்காஸ் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் மேலும் சில பெரும் சஹாபிகள் இருந்தார்கள். மரணத்தின் போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய வயது பல்வேறு அறிவிப்புகளில் 53 லிருந்து 65 வயது வரை கூறப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** நல்லடியார்களின் அருகில் நல்லடக்கம் செய்யப்படுவதும் ஓர் அருளாகும். எவர் ஒருவர் முழுமையான ஈடுபாட்டுடன் அல்லாஹ்வுடன் தொடர்பு கொண்டு விடுகிறாரோ அவரை அவன் வீணாக்கமாட்டான். அபூபக்ர் மற்றும் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோரின் உண்மை மற்றும் உளத்தூய்மையின் புகழ் எந்த அளவுக்கு மேன்மையானதாக இருந்தது! அவர்கள் இருவரும் எப்படிப்பட்ட அருளுக்குரிய அடக்கஸ்தலத்தில் அடக்கம் செய்யப்பட்டார்கள் எனில், ஒருவேளை மூஸா மற்றும் ஈஸா ஆகியோர் உயிரோடிருந்திருந்தால் முழு ஆர்வத்துடன் அங்கு அடக்கம் செய்யப்பட எண்ணம் கொண்டிருப்பார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மரணிக்கும் தருவாயில், அன்னார் தமக்கு ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் பாதங்களில் இடம் கிடைத்துவிட வேண்டும் என்ற விஷயத்துக்காக மிகவும் துடிப்பை வெளிப்படுத்தினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எப்படிப்பட்ட மனிதர் எனில் அன்னாரை பற்றி கிருத்தவ வரலாற்றாசிரியர்களும், "அன்னார் உலகில் வேறு எவரும் நடத்திடாத ஆட்சியை நடத்தினார்கள்" என்று எழுதுகிறார்கள். கிருத்தவ வரலாற்றாசிரியர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏசுகிறார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் புகழ்கிறார்கள். எல்லா நேரமும் (ரஸூலின்) அருகில் இருக்கக்கூடிய இத்தகைய மனிதர் இறக்கும் தருவாயிலும் தமக்கு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய பாதங்களில் இடம் கிடைத்துவிட வேண்டும் என்று ஆவல் கொள்கிறார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் மற்றும் திர்மிதியின் அறிவிப்புக்கு ஏற்ப ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு வஃபாத்தின் போது 63 வயது இருந்தது என்று கூறப்பட்டிருக்கிறது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: வஃபாத்தின்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு 63 வயது இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர்

(ரலி) அவர்களது வஃபாத்தின் போது 63 வயது இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது வஃபாத்தின் போது அவர்களுக்கும் 63 வயது இருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய தூய உடலின் தலைமாட்டில் நின்றவாறு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஒருவரது நல்ல அமல்களைப் பின்பற்றும் விதத்தில், எனக்கு நேசத்திற்குரியவராக இருக்கும் வகையில் தங்களுக்கும் மேலாக வேறு எவரையும் தாங்கள் விட்டுச்செல்லவில்லை. அல்லாஹ்வின் மீதாணையாக! எனக்கு இந்தப் போர்வையால் போர்த்தப்பட்டுள்ள மனிதரை விட அதிகமாக உலகில் வேறு எந்த மனிதரும் விருப்பத்திற்குரியவர் இல்லை. நான் நபி (ஸல்) அவர்களிடமிருந்து பல முறை இவ்வாறு அன்னார் கூற கேட்டிருக்கிறேன்: "நானும் அபூபக்ரும் உமரும் நுழைந்தோம். நானும் அபூபக்ரும் உமரும் வெளியேறினோம். அதாவது, இவ்வாறு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பல்வேறு வாக்கியங்களைக் கூறுவார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய வஃபாத்தின் போது 'அன்னார் இஸ்லாத்தின் பாதுகாப்பான கோட்டையாக இருந்தார்கள். ஒருவேளை அன்னாரது அறிவை தராசின் ஒரு தட்டில் வைத்து மற்றொரு தட்டில் மீதமுள்ள அனைத்து மனிதர்களுடைய அறிவையும் வைத்தால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது தட்டு எடைமிக்கதாக இருக்கும்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய காலகட்டத்தில் இஸ்லாத்தின் உதாரணம் தொடர்ந்து முன்னேற்றத்தின் பாதையில் சென்று கொண்டிருந்த மனிதனை ஒத்ததாக இருந்தது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உண்மைக்கு வள்ளலாகவும் பொய்யிற்குக் கருமியாகவும் இருந்தார்கள். அன்னாரது வஃபாத்தின் போது ஸயீது பின் ஸைது (ரலி) அவர்கள் அழுதவாறு, 'ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது வஃபாத்தின் காரணத்தினால் இஸ்லாத்தில் கியாமத் வரை நிரம்ப முடியாத அளவுக்கு விரிசல் ஏற்பட்டுவிட்டது' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் 10 திருமணங்கள் செய்திருந்தார்கள். அவற்றின் மூலம் 9 மகன்களும் 4 மகள்களும் பிறந்தனர்.

பிரசித்தி பெற்ற வரலாற்று ஆசிரியர் எட்வர்டு கபன் எழுதுகிறார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது இறையச்சமும் பணிவும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விடக் குறைவாக இருக்கவில்லை. அன்னாரது உணவில் பார்லியின் ரொட்டியும் பேரித்தம் பழங்களுமே இருந்தன. தண்ணீர் அவர்களது பானமாக இருந்தது.

மைக்கேல் ஹெச் ஹார்ட் தமது நூலான **The Hundred** இல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது குறிப்பை 52வது இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அநேகமாக முஸ்லிம்களின் மகத்துவமிக்க கலீஃபாவாக இருந்தார்கள் என்று இவர் எழுதியுள்ளார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிபி 634 இல் கலீஃபா ஆனார்கள். கிபி 644 வரை கிலாஃபத் பொறுப்பில் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்களது 10 வருட கிலாஃபத் காலகட்டத்தில்தான் அரேபியர்கள் மிக முக்கியமான வெற்றிகளை பெற்றார்கள். எந்த அளவுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது பரந்த வெற்றிகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றனவோ அந்த அளவுக்கு அந்த வெற்றிகளின் உறுதித்தன்மையும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது வெற்றிகள் சந்தேகத்திற்கிடமின்றி தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவையாகும். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அன்னார் இஸ்லாத்தைப் பரப்புவதில் மிக குறிப்பிடத்தக்க மனிதராக இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய காலகட்டத்தில் அரேபியர்களது வெற்றிகள் சார்லமேன்

மற்றும் ஜூலியஸ் சீஸருக்கு இணையாக அவற்றின் தன்மை மற்றும் காலத்தின் அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

பேராசிரியர் பிலிப் கே.ஏ.டி எழுதுகிறார்கள்: சாதாரணமான, சிக்கனமான மற்றும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது செயல்திறன்மிக்க, திறமைவாய்ந்த பிரதிநிதியாக விளங்கிய ஹஸ்ரத் உமர் அவர்கள் உறுதி வாய்ந்தவராகவும் பலம் வாய்ந்த உடலமைப்பையும் பெற்றவராக இருந்தார்கள். அன்னார் ஒரு எளிய இறைநேசரை போன்று எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். அன்னாரது உயர்ந்த மற்றும் மேன்மையான செயல்பாடுகள் உயிரோட்டம் உள்ள அனைத்துப் பிரதிநிதிகளுக்கும் பின்பற்றத்தக்க உதாரணமாக ஆகிவிட்டன.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய குறிப்பு இனியும் தொடரும் என்று கூறிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பின்வரும் மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பைக் கூறி ஜனாஸா காயிப் தொழு வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

**1.** டாக்டர் மிர்ஸா முபஷ்ஷிர் அஹ்மது ஸாஹிப் அவர்களின் மனைவி ஸாஹிப்ஸாதி ஆஸிஃபா மஸ்ஊதா பேகம் ஸாஹிபா அவர்கள். இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது மகள் வழிப்பேத்தியும், ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் ஸாஹிபா மற்றும் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் அவர்களின் இளைய மகளும் ஆவார்கள். *ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* என்னுடன் இவர்களுக்கு பல்வேறு வகையில் உறவு முறை இருந்தது. இவர்கள் என்னுடைய தந்தை வழி பாட்டியின் சகோதரியும் ஆவார்கள். உறவில் எனது சிற்றன்னையும் ஆவார்கள்; அத்தையும் ஆவார்கள். இவ்வனைத்து உறவுகள் இருந்தும் நான் காலத்தின் கலீஃபாவுக்குக் கட்டுப்பட்டவள் ஆவேன் என்றே கூறி வந்தார்கள். இவர்கள் பின் விட்டுச் சென்றவர்களில் ஒரு மகனும் நான்கு மகள்களும் இருக்கிறார்கள். மர்ஹூமா ஏழைகளையும் தனக்குக் கீழ் இருந்தவர்களையும் பணியாளர்களையும் உறவினர்களையும் மிகவும் கருத்தில் கொள்பவர்களாக இருந்தார்கள். அல்லாஹ்வுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகளையும் அடியார்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகளையும் பேணி வந்தார்கள். கிலாஃபத்துக்குக் கட்டுப்பட்டவர் ஆகவும் நேசிக்கக் கூடியவராகவும் வசதிபடைத்த பெண்மணியாகவும் இருந்தார்கள். இறைவணக்கங்கள் மற்றும் பொருள் தியாகங்களில் மிகவும் மேலோங்கியவர்களாக இருந்தார்கள்.

**2.** கஸகஸ்தானின் முன்னாள் அமீர் ரூலான் சாயின் பாயிஃப் ஸாஹிபின் மனைவி மதிப்பிற்குரிய க்ளாரா ஆப்பா ஸாஹிபா அவர்கள்.

**3.** மதிப்பிற்குரிய விங் கமாண்டர் அப்துர் ரஷீது ஸாஹிப் அவர்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவர்களை லிபியா ஜமாஅத்தின் முதல் அமீராக நியமித்தார்கள்.

**4.** அமெரிக்காவைச் சார்ந்த மதிப்பிற்குரிய கரீம் அஹ்மது நயீம் ஸாஹிபின் மனைவி மதிப்பிற்குரிய ஸுபைதா பேகம் ஸாஹிபா அவர்கள்.

**5.** மதிப்பிற்குரிய ஹஃபீஸ் அஹ்மத் கும்மன் ஸாஹிப் அவர்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் பாவ மன்னிப்பிற்காகவும் உயர் தகுதிக்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ
يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى
وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி முஹம்மது சுல்தான் மைதீன்)**